**திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் – திருமதி.ம.க.செ.சுபாஷினி, எம்.எஸ்ஸி.,பி.எட்.,**

ப.மு.எண்.5056/அ1/2021, நாள் 25.11.2021.

பொருள் – தமிழ்நாடு அமைச்சப்பணி – பள்ளிக் கல்வித் துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தொகுதி IV தேர்வு – 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அரசுப் பணியாளர் தேர்வாணைம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி (வரவு–செலவு திட்டம்–1) நாள் 18.05.2018.
2. சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் ந.க.எண்.3406/பி.எஸ்.டி–12/2019, நாள் 15.02.2020.
3. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண்.27629/4/இ1/2020, நாள் 14.09.2020.
4. திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.3222/அ1/2020, நாள் 17.09.2020.
5. வள்ளியூர், மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண்.2904/அ1/2021, நாள் 26.10.2021 மற்றும் ந.க.எண்.2829/அ1/2021, நாள் 26.10.2021.

-------

2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை 02–ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வி துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியல் பார்வை 03.ல் காணும் செயல்முறைகள் மூலம் பெறப்பட்டது. அதனடிப்படையில் பார்வை 04–ல் கண்டுள்ளவாறு நியமன ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட கீழ்கண்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யகோரி பார்வை 05–ல் காணும் கடிதம் மூலம் கருத்துரு பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையிலும், பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி கீழ்கண்ட பணியாளர்களுக்கு அவரது பெருக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை நாள் |
|---|---|---|
| 01 | திருமதி.கு.சலேஸ் சாந்தி,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>காரியாண்டி,<br>வள்ளியூர் கல்வி மாவட்டம். | 21.09.2020<br>முற்பகல் |
| 02 | செல்வி.ம.ரெக்ஸ்லின்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>பணகுடி,<br>வள்ளியூர் கல்வி மாவட்டம் | 21.09.2020<br>முற்பகல் |

## நிபந்தனைகள்

1. இப்பணிவரன்முறை ஆணையானது, பார்வை 04ல் காணும் நியமன ஆணையில் நிபந்தணை எண்.06ல் உள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளில் தொகுதி IV- ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.
2. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார்.
3. தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.
4. பணிவரன்முறை செய்த விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு- பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருநெல்வேலி.

25.11.2021

பெறுநர்
சார்ந்த பணியாளர்கள்
(உரிய அலுவலர் மூலம்)

நகல்-

1. தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, பணகுடி
2. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, காரியாண்டி

நகல்- மாவட்டக் கல்வி அலுவலர், வள்ளியூர்.